மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Registries of women in Soolamani Kappiyam

Dr. P.S. Mooventhan

Associate Professor, Department of Tamil, S.S. Government Arts College, Tiruttani, India

Manuscript ID : **MT17A0038**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 26.08.2022
Revised: 31.08.2022
Accepted: 02.09.2022
Published: 05.09.2022

Pages : 23-35

DOI: 10.5281/zenodo.7371523

ABSTRACT:

Tamil Kappiyam's are created to promote the virtues of life that can enrich human society. Among the Iyberum Kappiyam's, the Soolamani is considered by the researchers to be a Iyberum Kappiyam. The author of this book is Tholamozhi Thevar. Although this book is an adaptation of a vernacular book, some changes have been made in accordance with the Tamil tradition. Although Soolamani Kappiyam is Jain religious, it also contains the biographies of women in the society of that time. This article discusses the record of women's participation in government and family life, their rights, and the role of women in religious life.

KEYWORDS:

Payapati, Cuyampirapai, Nanam, Matam, Maram, Camayam, Narporul, Karpolukkam.

சூளாமணி காப்பியத்தில் மகளிர் பதிவுகள்

முனைவர் ப.சு. மூவேந்தன்,
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக்கல்லூரி திருத்தணி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழ்க் காப்பியங்கள் மானிட சமுதாயம் வளம்பெறத்தக்க வாழ்வியல் அறங்களை மேம்படுத்துவதன் பொருட்டுப் படைக்கப்பட்டவை ஆகும். ஐஞ்சிறு காப்பியங்களில் சூளாமணி காப்பியம் பேரிலக்கியத் தகுதி பெற்றது என்று ஆய்வாளர்களால் குறிக்கப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் தோலாமொழித் தேவர். வடமொழிக் காப்பியத்தின் தழுவலாக இக்காப்பியம் படைக்கப்பட்டிருப்பினும் தமிழ் மரபுக்கேற்ற வகையிலான மாற்றங்கள் இந்நூலில் செய்யப்பட்டுள்ளன. சூளாமணி காப்பியம் சமண சமயச் சார்புடையதாயினும் இதில் அக்காலச் சமுதாயத்தில் இருந்த மகளிர் வாழ்வியல் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. அரச வாழ்விலும், குடும்ப வாழ்விலும் மகளிர் பங்களிப்பு, அவர்கள் பெற்றிருந்த உரிமைகள், சமய வாழ்வில் மகளிர் பங்கு ஆகியன குறித்து பதிவு செய்யப்பட்டுள்ள திறத்தினை இக்கட்டுரை விவாதிக்கிறது.

கருச்சொற்கள்

பயாபதி, சுயம்பிரபை, நாணம், மடம், மறம், சமயம், நாற்பொருள், கற்பொழுக்கம்.

முன்னுரை

தமிழ்க்காப்பியங்கள் அவ்வக்காலச் சமய நிலையினையும், சமூக நிலையினையும் அறிவிப்பனவாக அமைந்திருக்கின்றன. சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் மக்கள் பெற்றிருந்த இடமும் அவர்தம் நிலைப்பாடும் இக்காப்பியங்களின்வழி அறியத்தக்க செய்திகளாக உள்ளன. ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான சூளாமணி காவியத்தின் நோக்கம் சமண சமயவழி அறமுரைத்தலாக அமைந்திருப்பினும், அதில் அக்காலத்தில் மகளிர் வாழ்வியல் பற்றிய செய்திகளைக் குறித்துள்ளதனையும் காணமுடிகிறது. அவ்வகையில் சூளாமணிக் காவியத்தில் இடம்பெறும் மகளிர் நிலை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நோக்கம்

மக்களில் சரிபாதியினராகத் திகழும் பெண்களின் சமூகவியற் பங்கு மானுட வாழ்வில் மிக முக்கியமான இடம்பெற்றிருக்கிறது. எனினும் இலக்கியத்தில் இவர்களின் பங்களிப்பு மிகக் குறுகிய அளவினதாகவே இடம்பெற்றிருக்கிறது. தமிழ்க் காப்பியங்களில் இடம்பெறும் மகளிர் அக்காலச் சமூகத்தில் பெண்களின் நிலையினை அறிவிப்பதன் ஒரு கூறாகவே இடம்பெற்றுள்ளனர் என்பதனை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

சூளாமணியில் மகளிர்

ஐம்பெரும் காப்பியத்திற்கு நிகரானதாகக் குறிக்கப்படும் சூளாமணியில் இடம்பெறும் மகளிர் நிலை,

- இல்லற வாழ்வில் மகளிர்
- அரச வாழ்வில் மகளிர்
- கலை வாழ்வில் மகளிர்
- சமய வாழ்வில் மகளிர்

என்று வகைப்படுத்தி ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது

இல்லற வாழ்வில் மகளிர்

செம்பியன்மாதேவியார் காப்பியக் காலம் பெண்களுக்கு உரிய பங்களிப்பினை அளிக்காத நிலையில் இருந்ததைச் சூளாமணி உணர்த்தி நிற்கிறது. ஆதலால் மகளிர் தாம் மணங்கொண்ட மன்னவன் மனத்திற்கு ஏற்றவாறு வாழ்வதே சிறப்பு என்று அறிவுறுத்துவதனைக் காணமுடிகிறது.

மாசற்ற பொன்னில் சேர்த்து பதிக்கப்பட வேண்டிய ஒப்பற்ற மணிகள் ஈயத்தில் பதிக்கப்பட்டாலும் மறுக்காமல் அதிலும் பொருந்தி ஒளிதரும் தன்மை உடையன. அதுபோல சிறந்த குணமுடைய மகளிர் குணமில்லாத மணாளனுக்கு மணம் செய்விக்கப்பட்டாலும் தமது பண்பு மாறாமல் அவனுடன் ஒத்து வாழ்வர் என்பதனை,

"பொலங்கலக் குரியவாம் பொருவின் மாமணி
இலங்கலம் என்னல ஈயம் சேர்த்தினும்
குலங்கலத் தின்வழி குரவர் கூட்டினும்
ஆலங்கலங் குழலியர் அன்றெறன் கிற்பவோ"

(சூளா. பா. 230)

என்ற பாடல் தெளிவுறுத்தக் காண்கிறோம். இதனால் மகளிர் மணாளன் மனமறிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தும் பாங்கினைக் காணமுடிகிறது. சுடச்சுடரும் பொன்னே போல், எந்த நிலையில் இருந்தாலும், எத்தகு துன்பத்திற்கு உள்ளானாலும் பெண் தன் குணங்களிலிருந்து விட்டு விலகுதல் கூடாது என்று இதன்வழியாக அறிவுறுத்தப்படுவதனைக் காண்கிறோம்.

மனைத்தக்க மாண்புடையளாதல்

அன்பால் இணைந்த காதலர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியா மனத்தினராய், ஒருவர் மற்றவர் நலன் காணும் இயல்பு கொண்டோராய் வாழும் நிலையில் மகளிர் வாழ்ந்ததைச் சூளாமணி காப்பியம் எடுத்துரைக்கிறது.

திருமண வாழ்வில் ஈடுபடும் வாயுவேகை, திருமணத்திற்குப் பின்னர் கணவன் தன் நலம் அனைத்தும் விடுத்து மனைவியின் நலன் கருதுவோனாய் அவளுக்கு வேண்டும் பொருள்களை எல்லாம் கொடுக்கும் குணமுடையோனாகக் காணப்படுகிறான். அவ்வாறே அவன் மனைவியும் தன்னைப் பேணும் கருத்தைவிடுத்து, தன் கணவனின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவளாக விளங்குபவளாகத் திகழ்கிறாள் என்பதனை,

“காவி யாயணங் காயமிழ் தாயவன்
மேவு நீர்மைய ளாய்விருந் தாயினாள்”

(**சூளா. பா.** 148)

என்னும் பாடலடிகள் காட்டுகின்றன. கணவனின் உயிர் போன்றவளாக மனைவி விளங்கிய திறம் இதன்வழியாக உணர்த்தப்படுகிறது. இதேபோன்று திவிட்டனின் மனைவியாகிய சுயம்பிரபை இனிய மனையாளாக விளங்கிய திறத்தை,

“கரும மாவ தலங்குதர ரிவுளித் திண்டேர்
வல்லவ ளிளைய நம்பிக்குரியளா வழங்கப்பட்டாள்”

(**சூளா. பா.** 515)

என்னும் பகுதி எடுத்துரைக்கக் காணலாம். திருவள்ளுவர் குறிப்பிடும்,

“மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”

(**குறள்.** 57)

என்னும் குறட்பாவின் கருத்தினை மெய்ப்பிப்பதாய் இச்செயல்பாடுகள் விளங்கக் காண்கிறோம். இச்செய்திகள் யாவும் மகளிர் பொறுமைக்குணத்தையும், அன்போடு இணைந்து வாழப் பழகிக் கொள்ளும் தன்மையினையும் காட்டுவனவாக அமைந்திருப்பது தெளிவாகிறது.

பண்புநலன்களில் மகளிர்

காப்பிய கால மகளிர்க்குச் சிறந்த அணிகலன்களாக விளங்கியவை நாணம், மடம், கற்பு, என்னும் பண்புகளாகும். அவற்றில் நாணம் உயிரினும் சிறந்தது. நாணத்தினும் கற்புச் சிறந்தது என விளக்குவர் தொல்காப்பியர். நாணம் என்ற சொல்லிற்குக் காமக் குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதோர் உள்ளவொழுக்கம், என்று பொருள் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். பெண்களுக்குரிய இவ்வுயரிய பண்பைச் சூளாமணி ஆசிரியர் தமது காப்பியத்தில் பலபடக் காட்டுகிறார். சூளாமணி, வடமொழித் தழுவல் காப்பியமாயினும் திருக்குறளை அடியொற்றிப் பெண்ணின் பெருமையைச் சூளாமணி ஆசிரியர் பேசுகின்றார்.

விசய திவிட்டர்கள் மீது மங்கையர்க்கு உண்டாகிய காமத் தீயானது மிகுதியாகப் பரவி எழுந்தும் அம்மங்கையர்கள் தங்களுக்குரிய நாணத்தினை விட்டு நீங்காமல் உயிரைத் தாங்கி வாழ்ந்த நிகழ்வு புலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பெண்ணுக்குரிய நாணத்தைவிடச் சிறந்தது வேறொன்றுமில்லை; உயிரும் இரண்டாம் நிலைப்பட்டது தான் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. இதனை,

"கண்ணிலாக் கவின்ஒளிக் காளை மார்திறத்து
உண்ணிலா வெழுதரும் காமவூழெரி
எண்ணிலாச் சுடச்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணலாற் பிறிதுயிர் பெரிய தில்லையே"

(சூளா. பா. 63)

என்ற பாடல் புலப்படுத்துகிறது. விசய திவிட்டர்களது அழகையும் ஆண்மையையும் கண்டார் மயங்கும் கட்டழகையும் வெளிப்படுத்துவதற்கு இவ்வுத்தியை நூலாசிரியர் கையாண்டுள்ளார் என்று கருத இடமுண்டு.

நாணும் மடனும்

காவியத் தலைவியான சுயம்பிரபை வித்தியாதரப் பெண். செல்வமாக வளர்க்கப்பட்ட அரசிளங்குமரி, எந்த ஆடவனிடமும் உள்ளத்தைப் பறிகொடுக்காத அக்கட்டழகி திவிட்டனைக் கண்டதும் காதல் வாயப்பட்டாள். காதல் ஆழமாகப் படர்ந்த நிலையில் நாணமும் நிறையும் அவளைக் கைவிடுகின்றன. தன்னுடைய உள்ளத்தே

புகுந்துள்ள நாணம் என்ற பண்பினைத திரைச்சீலையாகக் கொண்டு பிறர் அறியாதவாறு மறைந்துநின்று தந்தையிடம் சென்றாள் என்னுமிடத்தில் பெண்மைக்கே உரிய நாணம் உணர்த்தப்படுகிறது.

திவிட்டன் பால் உள்ளத்தைப் பறிகொடுத்து அவன் மனங் கனிந்து நின்ற நிலையை

"கோணின்ற மதியம் போலக் குழைமுகம் சுடரக் கோட்டித்
தாணின்ற குவளைப் போதில் தாதகம் குழைய மோந்து
வாணின்ற நெடுங்கண் காளை வடிவினுக் கிவர மற்றை
தாணின்று விலக்க நங்கை றுடுவுநின் றுருகு கின்றான்"

(சூளா. பா. 982)

என்ற பாடல் படம்பிடித்துக் காட்டுகிறது. சுயம்பிரபை, தன்மனத்தில் புகுந்து நின்ற திவிட்டனை நாணமே திரையாகக் கொண்டு மறைத்துச் சென்றாள் என்று ஆசிரியர் கூறுவது,

"காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து"

(குறள். 1163)

என்ற குறட்பாவின் பொருளைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

கற்புத்திறம் பெற்ற மகளிர்

மங்கையரின் சிறப்பும் பெருமையும் கூறுமிடத்தில் அவர்கள் கற்பினால் சிறந்திருந்தனர் என்று வெளிப்படுத்துகிறார் தோலாமொழித் தேவர்.

"காமத் தொத்தலர்ந்தவர் கதிர்த்த கற்பினார்
தாங்கருங் கற்பின் தங்கை சசி என்பாள்"

(சூளா. பா. 61)

என்ற அடிகளில் கற்பு முதன்மை பெற்றிருப்பதைக் காணலாம். கற்பின் பொருட்டுப் பெண்ணானவள் சிறப்பிக்கப் பெறுவாள் என்பதனை இதன்வழியாக அறிகிறோம்.

தற்பெருமை கொள்ளாத் திறம்

மனைவியானவள் அன்பு, பாசம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, கடமை உணர்வு, மனப்பக்குவம் ஆகிய குணங்களைப் பெற்றவளாகத் திகழவேண்டும் என்பது மரபாக்கச் செயல்பாடுகளாக அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இதனை வெளிப்படுத்தும் விதத்தில்,

"திருமனைக் கிழத்திதன் றேங்கொள் சின்மொழி
மருமணி முடியினாள் மகிழ்ந்து மற்றவள்"

(சூளா. பா. 423)

என்று பெண்ணின் தற்பெருமை கொள்ளாத் திறம் உயர்ந்து பேசக் காணலாம். சுயம்பிரபையின் அழகினைப் பற்றி வாயுவேகை, அடிகளிடம் அடிபணிந்து குறிக்கக் காண்கிறோம்.

பெண்குழந்தை பிறப்பினைச் சிறப்பித்தல்

சூளாமணியில் இடம்பெறும் கவலனடி அரசன், தன் மகளைக் கிடைத்தற்கரிய ஒரு பெரும் செல்வம் கிடைத்ததாகக் கருதி மகிழ்கிறான். சுயம்பிரபை பிறந்ததால் தான், பிறநாட்டு அரசர்கள் வந்து அடிபணியும் பேறு கிடைத்ததாக எண்ணி மகிழ்கிறான். நம் குடியானது தன்னிடத்தில் பகையாகிய இருளை ஒழித்து, சிறந்து விளங்கக் காரணம் தன் மகளின் பிறப்பே என்று எண்ணி மகிழ்வதனை,

"பெண்பகர் திருவளாய் பிறந்து நங்குடி
மண்பக ருலகெலா மகிழச் செல்லுமே"

(சூளா. பா. 225)

என்னும் அடிகளால் உணரலாம்.

அரசவாழ்வில் மகளிர்

அரசனது மனைவியராகப் பலர் இருந்ததைச் சூளாமணி காப்பியம் எடுத்துரைக்கிறது. பயாபதியின் கோப்பெருந்தேவி மிகாபதி, இளையவள் சசிதேவி, இவள் மிகாபதியின் தங்கை. இருவரும் மன்னனுடன் மனங்கலந்து ஒருயிர் போன்று வாழ்கின்றனர். பெருந்தேவியர் இவ்விருவரது வெற்றியை,

"நீங்கரும் பமிழ்தம் ஊட்டித் தேனளாய்ப் பிழிந்த போலும்
ஒங்கிருங் கடலந் தானை வேந்தணங் குறுக்கு மின்சொல்
விங்கிருங் குவவுக் கொங்கை மிகாபதி மிக்க தேவி
தாங்கருங் கற்பின் தங்கை சசி என்பாள் சசியோ டொப்பாள்"

(சூளா. பா. 63)

என்ற பாடலில் புலப்படுத்துகிறார் தோலாமொழித்தேவர்.

இவ்விருவரும் திருமகளையும் கலைமகளையும் ஒத்துத் திகழ்ந்தனர். ஒருவனுக்கு இருமனைவியர் அமையின் ஒவ்வொருவருடைய குணநலன்களும் ஒவ்வொரு வகையாக அமைந்து ஏற்றத் தாழ்வுடன் காணப்படும். அவர்களுள் நல்லியல்பு உடையாரிடத்துத் தலைவன் பற்றுக் கொள்ளுதல் இயல்பு. அவ்வாறன்றிப் பயாபதியின் மனைவியர் இருவரும் குணநலங்களிலும் இன்பநலங்களிலும் ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வில்லாது மன்னனை மிகுந்த அன்புடன் உபசரித்து மனங்கலந்து பழகிவந்தனர். உருவத்தால் இருவராய் இருந்தபோதிலும் உள்ளத்தால் ஒருவராய் வாழ்ந்தனர் என்கிறார் ஆசிரியர்.

பல மனைவியராக வாழும் நிலை

கணவனுக்கு இணையான உரிமைகளைப் பெற்ற மனைவியைக் காப்பியங்கள் காட்டுகின்றன. என்றாலும், இக்காப்பியங்களில் இடம்பெறும் ஆடவர்கள் மனைவியர் பலரை மணந்து கொண்டு வாழ்ந்த நிலைப்பாட்டினையும் எடுத்துரைக்கின்றன. அரச குலத்தவனாயினும், குடிமக்களில் ஒருவனாயினும் பல மனைவியரை மணந்து கொண்டு வாழ்வதனையும், அதனை அக்கால மகளிர் எதிர்க்க இயலாத நிலையில் ஏற்றுக் கொண்டு வாழ்ந்ததனையும் காப்பிய நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

சூளாமணியில் இடம்பெறும் யயாபதி மனைவியர் பலரை மணந்துகொண்டு வாழ்ந்த நிகழ்வினை,

"அருங்க லக்குழாத் தரசன் தேவிமார்
பெருங்கு லத்தவர் பெயர்ந்து கண்டது"

(சூளா. பா. 591)

என்னும் பகுதியால் உணரமுடிகிறது. ஆண்கள் பெண்களை பலரை மணந்து கொள்வதற்கு அக்காலத்தில் வாழ்ந்த பெண்களும் துணையாக இருந்தமையும் உணரமுடிகிறது.

அக்காலச் சமுதாயத்தில் இருமனைவியரை மணந்து வாழும் முறை மன்னர்கள் முதல் குடிமக்கள் வரை எல்லோரிடத்திலும் அமைந்திருந்ததென்பதை அறிகின்றோம்.

மகளிர்க்குரிய உரிமைகள் பெறல்

சுயம்பிரபைக்குப் பட்டமளிப்பு விழா நடத்தப்பெறும் நிகழ்வினைத் தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் அறியச் செய்தான் திவிட்டன். கோப்பெருந்தேவி என்னும் பட்டத்தைத் தன் வாழ்க்கைத் துணைவிக்கு வழங்கும் நாளினை முரசறைந்து நகர மக்கள் அறிந்து கொள்ளச் செய்ததோடு, அச்செயலை நாட்டினரெல்லாம் அறியச் செய்த நிகழ்வால் அக்கால அரச மகளிர் பெற்றிருந்த உரிமைச்செயல்பாடுகள் தெளிவாகிறது.

“மாலையாங் கடைந்த போழ்தின் மங்கலத் தேவிபட்டங்
காலையா மணிவதென்று கண்ணதிர் முரசிற் சாற்றி;”

(சூளா. பா. 1547)

சூளாமணி காப்பியத்தில் இடம்பெறும் திவிட்டன், தன் மனைவி சுயம்பிரபைக்கு அரசியலில் பங்குபெறும் உரிமையைக் கொடுத்திருந்தான் என்ற குறிப்பினைக் காணமுடிகிறது. இதனை,

“அஞ்சுடன் வயிரப் பைம்பூ ணலைகடல் வண்ணன் தன்னாற்
பஞ்சுடை யல்குல் பாக வரசொடு பட்டங் கொண்டான்”

(சூளா. பா. 1550)

என்பதால் அறியமுடிகிறது. பொன்னாலான அணிகலன்களையும், நறுமண மாலைகளையும் அணிந்துகொண்டு ஒப்பனை செய்யப்பட்ட வயிர மணிகளை அணிந்த சுயம்பிரபை, அரசியலிலும் பாதி உரிமை உடையதாகி ‘கோப்பெருந்தேவி’ என்னும் பட்டத்திற்கு உரியவளாக்கப்பட்டிருந்தாள் என்பது இதன்வழியாக உணர்த்தப்படுகிறது.

வீரமாண்பில் மகளிர்

சூளாமணி காப்பியத்தில் இடம்பெறும் துணைமை பெண்மாந்தர்கள் வீரப் பண்பு மிக்கவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். தங்களுடைய கணவன்மார், போர்க்களத்தில் இறந்துபட்டனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அழுது அரற்றாமல், அனைவரும் தங்கள் கணவன்மார்களைப் போர்க்களத்தே காணவேண்டும் என்ற பெருவிருப்புடன் போர்க்களம் நோக்கிச் சென்றனர் என்பதனை,

"பொன்னவிர் பூங்குழையார் பொங்கேந் திளமுலையார்
மின்னுவிர் நுண்ணிடையார் மேல்வந் தணுகினார்"

(சூளா. பா. 1469)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

உடன் மாயும் தன்மை கொண்டோர்

போர்க்களத்தில் தன் கணவனின் இறந்துபட்ட உடலத்தைப் பார்த்த மாத்திரத்தில் தன் இன்னுயிரையும் இழந்த கற்புடைப் பெண்களின் சிறப்பினை,

"வெண்டாரை வேனெடுங்க னீர்மூழ்கி மேற்பிறழ
விண்டா ளுயிர்பின்னும் வெற்றுடல மாயினாள்"

(சூளா. பா. 1470)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

கலை வாழ்வில் மகளிர்

கலைகளால் மக்கள் மனமகிழ்வதோடு, புலன்களுக்கு நற்பயிற்சியையும் அளிக்கின்றனர். அறிவுபுகட்டுவதாகவும், பொழுதினைப் போக்குவதற்காகவும் கலைகளின் நோக்கம் அமைந்துள்ளன. சங்க காலத்தில் ஆடற்கலையும் இசைக்கலையும் பெருவளர்ச்சி பெற்றிருந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. இக்கலைகளில் தேர்ச்சி பெற்ற கலைவாணர்கள் இருந்ததையும், கலைஞர்களைப் புரப்பவர்கள் இருந்ததையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. இதனால் இக்கலை வளர்ச்சி பெற்ற நல்வழி ஏற்பட்டிருந்தமை தெளிவாகிறது.

காப்பியங்களில் இசைக்கலையும், ஆடற்கலையும் முதன்மையான இடம் பெற்றுள்ளன. ஆடற்கலையில் வல்ல மகளிர் அக்காலச் சமூகத்தில் உலவியதையும் காண முடிகிறது. இதன் சிறப்பினை, "கூத்து பார்த்து இரசிப்பதற்கான ஒரு கலை மட்டுமல்ல; கூத்து கலைஞர்க்கு ஒரு தொழில் மட்டுமல்ல; தெய்வ வழிபாட்டுடன் கலைஞர்களுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு சடங்காகவே திருவிழாக்காலங்களில் கூத்து நடந்தது" என்று தெளிவுறுத்துகிறார் க. இராசமாணிக்கம். (க. இராசமாணிக்கம், பண்டைத்தமிழர் வாழ்வியல், ப. 94)

"இக்கூத்துக்கலையில் ஈடுபட்ட ஆடவர்களைக் கூத்தர், பொருநர், தோரியர், பாணர் என்றும், பெண்களைக் கூத்தி, விறலி, பாடினி, கணிகை என்றும் கூறுவர்" (க. இராசமாணிக்கம், ப. 36) என்பதால், காப்பியக் காலச் சமூகத்தில் புரையோடிய

ஒன்றாகவே இக்கலையும் கலைஞர்களின் வாழ்வியலும் இணைந்திருந்தமை தெளிவாகிறது.

திவிட்டன் தூதர்களிடத்தில் உம்முடைய அரசன் கூத்தாடும் மகளிருடன் வந்து பரிசில் எம்மிடம் இரந்து நின்று யாம் வேண்டும் பொருளைத் தருக என்று கேட்பானாயின் எளிதில் பெற்றுச் செல்லலாம் என்று கூறுமிடத்தில் கூத்துக் கலைஞர்களின் சிறப்பு குறிக்கப்படுகிறது.

“மருங்குள தெனினது மகளி ராற்சில
பெருங்கலந் தாங்கினாற் பெறலு மாகுமே”

(சூளா. பா. 687)

என்பதில் திவிட்டன் பகைகொண்டு போரிட்டு எம்மை வெல்ல இயலாது என்பதும், உம் அரசன் யாழ் ஏந்திப் பாடிக்கொண்டு கூத்துக்கலை வல்ல மகளிர் வந்து இரந்து நின்றால், தேவையானதை எளிதில் பெற்றுச் செல்லலாம் என்று கூறுவதனைக் காணமுடிகிறது.

இதனால் கலைஞர்கள் மன்னர்களை அண்டி வாழவேண்டிய நிலையில் இருந்தமையும், மன்னர்களின் வீரம் குன்றிய காலத்தில் கலைஞர்களோடு வந்து இரந்துபெற வேண்டிய நிலை இருந்தமையும் உணரமுடிகிறது.

இசைவல்ல மகளிர்

சூளாமணி காப்பியத்தில் பண் அமைந்த இனிய இசைப்பாடலை மகளிர் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தனர் என்பது,

“பண்டான் கொண்ட பாவையர்பாட லிசை கேட்டான்”

(சூளா. பா. 1125)

என்னும் அடிகளால் உணரமுடிகிறது. மணிகளால் அமைக்கப்பட்ட வட்ட வடிவ மேடையின் மீது திவிட்டன், சுயம்பிரபையுடன் ஏறி, இனிதே ஆடியதுடன் பண் அமைந்த மகளிர்களின் இனிய இசைப்பாடலைக் கேட்டு மகிழ்ந்தான் என்பதும் தெளிவாகிறது.

துறவு வாழ்வில் மகளிர்நிலை

சூளாமணியில் இடம்பெறும் பயாபதி மன்னன், தனக்கு உயிரணைய மனைவியரிடத்தில் தான் துறவறம் மேற்கொள்ளவிருப்பதாகக் கூற, அதற்கு அம்மனைவியரும் தாங்களும் தவவொழுக்கத்தில் ஈடுபட்டுத் துறவற வாழ்க்கையை வாழத்தலைப்படுகிறோம் என்று கூறுவதனை,

**"காவியாய் நெடுங்கணீர் கருதிற் றென்னென
மேவினர் தவமவர் வேந்தன் முன்னரே"**

(சூளா. பா. 2095)

என்னும் பகுதியால் உணரமுடிகிறது. இல்லற வாழ்வின் இனிமையை விடுத்து, துறவறம் மேற்கொள்ளச் செல்லும் தன் கணவரின் தேவைகளுக்காகத் தங்கள் வாழ்வினை விட்டுக் கொடுப்பதோடு நில்லாது, அவர்தம் துறவறத்திற்குத் துணையாக நிற்கும் பாங்குடை மகளிர் செயல் இதன்வழி உணர்த்தப்படுகிறது.

பெண்களை இழிவாகக் கருதும் சமயநிலை

சைன சமயத் துறவிகள் எப்போதும் பெண்களை வெறுத்தே வந்தனர் என்பதற்குச் சமண இலக்கியங்களே தகுந்த சான்றாக அமைந்திருக்கின்றன. அவ்வடிப்படையில் இக்காப்பியத்திலும் பெண் பிறப்பை சிறப்பற்ற பிறப்பாக்க் கருதும் போக்கு இருந்தமை காட்டப்பட்டுள்ளது. 'மானுடப் பிறப்பில் பெண் பிறப்பு சிறப்புடையதன்று' என்ற கருத்து நிலவியதை,

**"அண்ணை அலிகுருரு ஆதி யவர்களை
மண்ணுயர் ஞாலத்து மானிடரா கவைத்து
எண்ணுநர் யாருளர், எல்லாம் அமையினும்
பெண்ணின் பிறவியும் பீடுடைத் தன்றே"**

(சூளா. பா. 64)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. இவற்றை நோக்கும் போது அக்காலச் சமுதாயத்தில் பெண்ணறிவும் பிறப்பும் குறைவாகவே மதிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

முடிவுரை

பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த மக்கள் நிலை குறித்து அறிந்து கொள்வதற்கு காப்பியங்கள் பெருந்துணை செய்கின்றன. காப்பியங்களின் முதன்மையான பணியாக அமைந்திருந்தவை சமயநெறி பரப்பலே எனினும், அதன்வழியாக மக்கள் நிலை குறித்த செய்திகளையும் அவை பதிவு செய்துள்ளன. அவ்வகையிலேயே சூளாமணி காப்பியத்தின் மகளிர் நிலை குறித்து ஆராயப்பட்டது.

சூளாமணி, தழுவல் காப்பியம் எனினும் அது அக்காலத்தில் மகளிர் நிலை குறித்த செய்திகளைச் சமயநெறி நோக்கிலேயே எடுத்துரைப்பது தெளிவாகிறது.

சூளாமணி காப்பியத்தில் இல்லற வாழ்வில் மகளிர், அரசியர் வாழ்வில் மகளிர், சமய வாழ்வில் மகளிர், கலைவாழ்வில் மகளிர் என்ற நிலைகளில் பகுத்தாராயப்பட்டது.

இல்லற வாழ்வில் ஈடுபடும் மகளிர் கணவனின் குணமறிந்து அவனைத் திருத்தும் பணியினைச் செய்திடலே சிறப்பு என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசியர் வாழ்வில் மகளிர் வீரம் செறிந்தவர்களாக இருந்தமையும், மன்னனால் அரச உரிமை பெறும் சிறப்பும் பெற்றவர்களாக விளங்கியமை புலனாகிறது. ஓர் அரசனுக்குப் பல மனைவியர் இருந்தமையும் தெளிவாகிறது.

பெண்களுக்குரிய மரபுவழிக் குணங்களான நாணம், மடம், கற்புத்திறத்தின் சிறப்பு தேவை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

சூளாமணி சமயக் காப்பியமாதலின் பெண்கள் இரண்டாம் நிலையினராகவே இருப்பதாகக் காட்டுகிறது. சமயவாழ்வில் ஆண்களுக்குத் துணைசெய்திடல் வேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டுள்ளது. மானுடப் பிறப்பில் பெண் பிறப்பு சிறப்புடையதன்று என்ற கருத்தைச் சமயநோக்கில் எடுத்துரைப்பது புலனாகிறது.

சான்றெண் விளக்கம்

1. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), சூளாமணி, கழக வெளியீடு, சென்னை, 1970
2. க. இராசமாணிக்கம், பண்டைத்தமிழர் வாழ்வியல், தமிழ்க்குடில் பதிப்பகம், சேலம், 2006
3. மு. வரதராசன், (உ.ஆ,) திருக்குறள், கையடக்கப்பதிப்பு, கழக வெளியீடு, சென்னை, 1988

துணைநூற்பட்டியல்

1. தென்னிந்தியக் கல்வெட்டுகள்:தொகுதிகள். I to III & Vols. IV முதல் VIII மற்றும் XIII உரை.
2. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி - சோழங்கள். - 24 பதிப்பு 1955. மெட்ராஸ் பல்கலைக்கழகம்.
3. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் - நான்கு சோழர்கள் கோவில்கள்., புலன்சி நினைவு நிறுவனம், பம்பாய்.
4. இந்திய மக்களின் வரலாறு மற்றும் கலாச்சாரம்,Vol. V. பாரதிய வித்யா பவன், பம்பாய்.
5. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், வரலாறு பிற்கால சோழர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
6. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழா கலைப் பாணி ஜீவன் பிரஸ், மதுரை - 5. 1966.
7. ஆரம்ப காலச் சோழர் கலை மற்றும் கட்டிடக்கலை, பணியகம் தமிழ் பப்ளிகேஷன்ஸ், சென்னை, தமிழ்நாடு அரசு.

REFERENCES

1. Rajamanickam, K., Pandai Thamizhar Vazhviyal, Thamizhkudil Publications, Selam, 2006
2. Somasundaranar, P.V. (Narrator), Soolamani, Kazhagam Publications, Madras, 1970
3. Varadharasan. M., (Narrator), Thirukkural, (Tiny) Kazhagam Publications, Madras, 1988